CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No. 6 1/B, Layards Road, Colombo 05. **Tel:** +94112584047 / +94114503001
**Fax:** +94112584047 **E-mail:** cmev@cpalanka.org **Web:** www.cmev.org

மே 25, 2022.

**இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் அறிக்கை**

நாட்டில் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றிலான துரித சீர்குலைவு தொடர்பாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அதன் ஆழ்ந்த கரிசனைகளைத் தெரிவிக்கின்றது. மே 9ஆந் திகதி, 2022 அன்று நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்ற அழிவுகர வன்முறைகளைத் தொடர்ந்து, குற்றமிழைத்தவர்கள் தொடர்பான புலன்விசாரணைகள் மற்றும் கைதுகள் என்பன அரசியல் செல்வாக்கின் கீழ் நடைபெறுவதாக CMEV இற்கு அறியக்கிடைத்துள்ளது. வன்முறைகளுடன் தொடர்புபட்டுள்ளதற்கான தெளிவான சான்றுகள்/ஆதாரங்களின்றி சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக CMEV இற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சம்பவத்தில், ஏறாவூர் பிரதேசத்தில் ஒன்று திரண்ட ஒரு பெரும் மக்கள் கூட்டத்தினுடைய ஒரு புகைப்படத்தில் காணப்பட்டார் என்ற காரணத்திற்காக மட்டுமே கைது செய்யப்பட்ட, கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் 16 வயதுடைய ஒரு சிறுவன், மே 23, திங்கட் கிழமையன்று மதியத்தின் பின்னரே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

காணொலி மற்றும் ஏனைய சாட்சியங்கள் இருக்கின்ற போதிலும் கூட, மே 9 ஆம் திகதியன்று, 'மைனா கோ கம' மற்றும் 'கோட்டா கோ கம' ஆகிய இடங்களில் வன்முறைகளை முன்னெடுத்த நபர்களை கைது செய்வதில் பொலிஸ் தரப்பிலிருந்து தயக்கம் காண்பிக்கப்பட்டதையும் CMEV அவதானித்துள்ளது. 'கோட்டா கோ கம' தாக்குதல் தொடர்பில் முறைப்பாடுகள் செய்த மற்றும் நேரிற் கண்ட சாட்சிகளாக இருக்கும் அருட்தந்தை. ஜீவந்த பீரிஸ் மற்றும் ஏனைய பலரினதும் வெளிநாட்டுப் பயணங்களை இடைநிறுத்துவதற்கான ஒரு நீதிமன்றக் கட்டளையை, சட்டமா அதிபர் திணைக்களம் பெற்றது, என CMEV இற்கு தெரிவிக்கப்பட்டடுள்ளது. ஆனால், அவர்கள் அனைவரும் கட்சி சார்பற்ற மக்கள் போராட்டங்களின் தீவிரமான ஆதரவாளர்கள் மட்டுமேயாவர்.

சமூகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் மற்றும் சட்டத்தின் ஆட்சியையும் உறுதிப்படுத்துவதற்கு சுயாதீனமாகவும் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையுடனும் செயலாற்றுவதற்கு சட்டத்தை அமுல்படுத்தும் அனைத்து நிறுவனங்களையும் CMEV வலியுறுத்துகிறது. பொலிஸ் மா அதிபர், திரு. சி.டி. விக்கிரமரட்ன அவர்களால் 06.12.2021 அன்று திகதியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதமொன்றிற்கமைய 01.01.2011 இலிருந்து 03.11.2021 வரையான இடைப்பட்ட காலத்தில் நியமிக்கப்பட்ட 184 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுள் 182 பேர்கள் பதவிக்குத் தேவையான தகுதிகளைக் கொண்டிருக்க வில்லையென்பதை அறிந்து CMEV அதிர்ச்சியடைந்தது. இக்கடிதம் தற்பொழுது இணையத்தளத்தில் காணப்படுகிறது. பிரதேசத்திலுள்ள ஆளுங்கட்சி அரசியல்வாதிகளுக்கு சார்பான வகையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் அரசியல் பக்கச்சார்புநிலை, நன்கு அறியப்பட்டதொன்றாகும். உடனடியாக நிலைமையைச் சீர்செய்வதற்கு பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சினை CMEV வலியுறுத்துகிறது. அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கும் மற்றும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறி, பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக சட்டத்துக்கு முரணான வகையில் செயற்ப்பட்ட (பதில்நடவடிக்கை மேற்கொண்ட) உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கான தேவையை CMEV மீண்டும் வலியுறுத்துகிறது.

ஒரு புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கு பொதுமக்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தாலன்றி தற்போதைய அரசியல் நெருக்கடி தீர்க்கப்படமாட்டாது, என CMEV நம்புகிறது. பாராளுமன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டனர். 20 பெப்ரெவரி, 2023 வரை பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரசியலமைப்பு ரீதியான அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருக்காதினால், பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் மற்றும் கூடிய விரைவில் ஒரு

பொதுத் தேர்தலுக்குச் செல்லவதற்கும் நிறைவேற்று ஜனாதிபதியினை வேண்டிக்கொள்ளும் ஒரு பிரேரணையை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் விழுமியங்களை மதிப்பதற்கு அனைத்துக் கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களை CMEV வலியுறுத்துகிறது. இது, தற்போதைய நெருக்கடிகளைக் கையாள்வதற்கு அவர்களின் விசுவாசம் மற்றும் நம்பிக்கையைக் கொண்டுள்ள பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு வாக்காளர்களை இயலுமையை வழங்கும்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டிணைவு என்பவற்றினால், தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்கு சுயாதீனமான மற்றும் கட்சிச் சார்பற்றதுமான ஒரு அமைப்பாக 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது CMEV ஆனது CPA, FMM மற்றும் INFORM(இன்போர்ம்)-மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம் என்பவற்றால் கட்டமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கலாநிதி. பா. சரவணமுத்து<br>இணை ஒருங்கிணைப்பாளர் | திரு.லசந்த டி சில்வா<br>இணை ஒருங்கிணைப்பாளர் | திரு. உதய களுபத்திரண<br>இணை ஒருங்கிணைப்பாளர் |